**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 28.04.2023

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்கள் நெல் நடவு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவையில் இளமறிவியல் (வேளாண்மை) மூன்றாம் ஆண்டு படிக்கும் மாணவர்கள் நன்செய் பண்ணையில் நெல் நடவு செய்தனர். இளமறிவியல் (வேளாண்மை) படிக்கும் மாணவர்கள் தாங்கள் படித்த அறிவியல் தொழில்நுட்பங்களைக் கொண்டு தானாக நெற்பயிர் பயிரிட வேண்டும். மாணவர்களுக்கு 4 சென்ட் அளவு நிலம் வழங்கப்படும். அதில் அவர்கள் சேற்றுழவு முதல் அறுவடை முதலானஅனைத்து பணிகளையும் செய்ய வேண்டும். நெற்பயிர் நடவு நன்செய் பண்ணையில் 28.04.2023 அன்று நடைபெற்றது. காலை 6.30 மணியளவில் மாணவர்கள் நடவுப் பணியை செய்ய துவங்கினர். துவக்க விழாவில் கலந்து கொண்ட பல்கலைக்கழக துணைவேந்தர், உயர் அதிகாரிகள், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களை பாடப்பேராசிரியர் முனைவர் K. திருகுமரன் வரவேற்றார்.

உழவியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் P. பரசுராமன் அவர்கள் மாணவர்கள் மேற்கொள்ள வேண்டிய மேலாண்மை முறைகள் குறித்து விளக்கம் அளித்தார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி அவர்கள் நடவு விழாவை துவக்கி வைத்தார். வேளாண்மை முதன்மையர் முனைவர் ந.வெங்கடேச பழனிச்சாமி, பயிர் மேலாண்மை இயக்ககத்தின் இயக்குனர் முனைவர் மு.க. கலாராணி, தேர்வு கட்டுப்பாட்டாளர் முனைவர். V. பாலசுப்ரமணி, விரிவாக்க கல்வி இயக்குனர் முனைவர் பி.பொ. முருகன், பயிர் பாதுகாப்பு மையத்தின் இயக்குனர் முனைவர் மூ.சாந்தி, நீர் நுட்பமையத்தின் இயக்குநர் முனைவர். S. பழனிவேலன், விதை மையத்தின் இயக்குனர் முனைவர் ர.உமாராணி ஆகியோர் மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்த கருத்துரு மற்றும் செயல் விளக்கங்களை பார்வையிட்டு மாணவர்களுடன் கலந்துரையாடினார்கள். பின்பு பல்கலைக்கழக துணைவேந்தர், உயர்அதிகாரிகள், துறைத் தலைவர்கள் மற்றும் பேராசிரியர்கள் வயலில் இறங்கி மாணவர்களுடன் சேர்ந்து நெல் நடவை துவக்கி வைத்தனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**